1753

# அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆலோசனைகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரேரணைகளுக்கு ஏற்புடையதாக இல்லை.



எம். ஐ. எம். முஹியத்தீன்

# அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆலோசனைகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரேரணைகளுக்கு ஏற்புடையதாக இல்லை.

எம்.ஐ.எம். முஹியத்தீன்

# அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான
# பொதுசன ஐக்கிய முன்னணி
# அரசாங்கத்தின் ஆலோசனைகள்
# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின்
# பிரேரணைகளுக்கு ஏற்புடையதாக இல்லை.


பதிப்பு : 25 ஜனவரி 1999

ஆசிரியர் : எம்.ஐ.எம்.முஹியத்தீன்



உரிமைகள் : அனைத்தும் ஆசிரியருக்கே



வெளியீடு : எம்.ஐ.எம்.பதிப்பகம்
57, நொறிஸ் கனல் றோட்டு
கொழும்பு - 10
ஸ்ரீலங்கா.

1753

## 1. அதிகாரப்பகிர்வு

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் வடக்கு கிழக்கு இனப்பிரச்சினை தீர்வுக்கான பிராந்திய சபை தாபித்தலுக்காக 1997 ஒக்டோபர் மாதம் பாராளுமன்றத்திற் சமர்ப்பித்த ஆலோசனைகள் முஸ்லிம்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. இன்றைய அரசாங்கத்தில் பொறுப்புள்ள பங்குதாரர்களாகவிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கௌரவ அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு 1995 மே 26ஆம் திகதி அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்காகச் சமர்ப்பித்த பிரேரணைகள் எதுவித கருசினையும் இல்லாமல் நிராகரிக்கப் பட்டுள்ளமை பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் முஸ்லிம்களுக்குப் பெரும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

வடகிழக்குப் பிராந்தியம் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு நிருவாக மாவட்டங்களோடு மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் என்றும், தென்கிழக்குப் பிராந்தியம் - அம்பாரை நிர்வாக மாவட்டத்திலுள்ள கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தேர்தல் தொகுதிகள் என்றும் கூறப்பட்டுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த தேருனர்கள் அத்தகைய மாவட்டங்களும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்களும் ஒன்றிணைந்து வடகிழக்குப் பிராந்தியம் என்று குறிப்பிட்டுள்ள பிராந்தியமாக அமைதல் வேண்டுமா? என்னும் கேள்வி பற்றித் தீர்மானிப்பதற்கென மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் மக்கள் தீர்ப்பொன்றுக்கான வாக்கெடுப்பு நடாத்தப்படும். அத்தகைய தீர்ப்பொன்றின் போது இக்கேள்விக்கு அளிக்கப்பட்ட செல்லுபடியான பெரும்பான்மை வாக்குகள்மூலம் சாதகமாகப் பதிலிறுக்கப்படுமிடத்து, வடகிழக்குப் பிராந்தியத்துக்கெனப் பிராந்திய சபையொன்று தாபிக்கப்படும்.

**1981ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பு**

| மாவட்டம் | மொத்தம் | சிங்களவர் | இல.தமிழர் | இந்.தமிழர் | முஸ்லிம்கள் | ஏனையோர் | நிலப்பரப்பு சதுரமைல் |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 738,788<br>100.0% | 5,648<br>0.8% | 715,892<br>96.9% | 4,924<br>0.7% | 11,839<br>1.6% | 485<br>0.1% | 440 |
| கிளிநொச்சி | 91,764<br>100.0% | 1,011<br>1.1% | 74,493<br>81.2% | 15,056<br>16.4% | 1,119<br>1.2% | 85<br>0.1% | 558 |
| வவுனியா | 95,428<br>100.0% | 15,794<br>16.6% | 54,179<br>56.8% | 18,714<br>19.6% | 6,505<br>6.8% | 236<br>0.2% | 1467 |
| முல்லைத்தீவு | 77,189<br>100.0% | 3,992<br>5.2% | 58,209<br>75.4% | 11,215<br>14.5% | 3,651<br>4.7% | 122<br>0.2% | |
| மன்னார் | 106,235<br>100.0% | 8,683<br>8.2% | 54,474<br>51.3% | 13,850<br>13.0% | 27,714<br>26.1% | 1,514<br>1.4% | 964 |
| வடமாகாணம் | 1,109,404<br>100.0% | 35,128<br>3.2% | 947,247<br>86.3% | 63,759<br>5.8% | 50,828<br>4.6% | 2,442<br>0.2% | 3429 |
| திருகோணமலை | 274,036<br>100.0% | 97,645<br>36.6% | 88,951<br>32.5% | 5,422<br>2.0% | 79,723<br>29.1% | 2,291<br>0.8% | 1048 |
| மட்டக்களப்பு | 330,433<br>100.0% | 11,255<br>3.4% | 233,713<br>70.8% | 4,074<br>1.2% | 78,829<br>23.9% | 2,562<br>0.7% | 1016 |

**1981ம் ஆண்டுக் குடிசன மதிப்பு**

| மாவட்டம் | மொத்தம் | சிங்களவர் | இல.தமிழர் | இந்.தமிழர் | முஸ்லிம்கள் | ஏனையோர் | நிய்ரப்பு சுநரமைல் |
|---|---|---|---|---|---|---|---|
| திருகோணமலை மட்டக்களப்பு | 604,365<br>100.0% | 108,900<br>18.0% | 322,664<br>53.4% | 9,496<br>1.6% | 158,852<br>26.2% | 4,853<br>0.8% | 2,064 |
| வடமாகாணம் திருகோணமலை மட்டக்களப்பு | 1,731,769<br>100.0% | 144,028<br>8.4% | 1,279,911<br>74.7% | 73,255<br>4.3% | 209,380<br>12.2% | 7,295<br>0.4% | 5,493 |
| அம்பாரை | 388,970<br>100.0% | 146,943<br>37.8% | 77,826<br>20.0% | 1,411<br>0.4% | 167,668<br>41.6% | 1,220<br>0.3% | 1,775 |
| கிழக்கு மாகாணம் | 993,435<br>100.0% | 255,843<br>25.8% | 400,490<br>40.3% | 10,907<br>1.1% | 320.220<br>32.2% | 5,973<br>0.6% | 3,839 |
| வடக்கு, கிழக்கு மாகாணங்கள் | 2,102,839<br>100.0% | 290,971<br>13.8% | 1,357,738<br>64.6% | 74,666<br>3.6% | 371,048<br>17.6% | 8,415<br>0.4% | 7,268 |

மேலே குறிப்பிடப்பட்டிருப்பதன் பிரகாரம் திருகோணமலை மட்டக்களப்பு மாவட்டங்களில் நடாத்தப்படும் மக்கள் தீர்ப்புக்கான வாக்கெடுப்பின் போது பெரும்பான்மையினர் சாதகமாக வாக்களிக்கப்பட்டு ஏற்படுத்தப்படும் வடகிழக்குப் பிராந்தியத்துக்கான பிராந்திய சபையில் 1981ம் ஆண்டுக் குடிசன மதிப்புப்படி முஸ்லிம்களின் எண்ணிக்கை 209,380 - 12.2% என்பதும் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 58,852 - 26.2% முஸ்லிம்களினதும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 78,829 - 23.9% முஸ்லிம்களினதும் ஒன்றிணைந்த விகிதாசாரம் 26.2%, 12.2% ஆக வீழ்ச்சியடைவதும், இங்குள்ள முஸ்லிம்களின் அரசியல் வீரியம் வலுவிழப்பதும் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும்.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைபெற வேண்டிய மக்கள் தீர்ப்புக்கான வாக்கெடுப்பின் போது பெரும்பான்மையினர் பாதகமாக வாக்களித்தால் வடகிழக்குக்கான மாநிலசபை ஏற்படுத்தப்பட மாட்டாது. திருகோணமலை மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைபெறவிருக்கும் மக்கள் தீர்புக் கணிப்பதற்கான வாக்கெடுப்பின் போது பெரும்பான்மையினர் சாதகமாக வாக்களிக்கப்பட்டு வடகிழக்கு மாநிலசபை ஏற்படுத்தப்பட்டால் மாத்திரம்தான் அம்பாரை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளை ஒன்றிணைத்து தென்கிழக்குப் பிராந்தியமெனப் பெயர் குறிக்கப்படும் பிராந்தியசபை ஏற்படுத்தப்படும், என்பது ஒரு முக்கியமான அம்சம்.

வடகிழக்குப் பிராந்திய சபை ஏற்பாடாகினால் அம்பாரை மாவட்டத்தில் அம்பாரை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த தேருனர்கள் அத்தகைய பிரிவு அம்பாரைப் பிராந்தியமெனப் பெயர் குறிப்பிடப்படும் பிராந்திய சபையாக இருக்க வேண்டுமா? என்ற கேள்வியைத் தீர்மானிப்பதற்கென அம்பாரைத் தேர்தல் தொகுதியில் மக்கள் தீர்ப்பெடுப்பொன்று நடாத்தப்படும். அத்தகைய மக்கள் தீர்ப்பெடுப்பின் போது பெரும்பான்மையினர் சாதகமாகத் தீர்மானிக்கப்படுமிடத்து

**1981ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பு: கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளை உள்ளடக்கிய தென்கிழக்குப் பிராந்தியம்.**

| உ.ப.அ.அ.பிரிவு | மொத்தம் | சிங்களவர் | இல.தமிழர் | இந்.தமிழர் | முஸ்லிம்கள் | ஏனையோர் | நிலப்பரப்பளவை |
|---|---|---|---|---|---|---|---|
| கல்முனை (கரவாகு) | 63,803 100.0% | 816 1.3% | 18,550 29.1% | 211 0.3% | 45,827 71.8% | 399 0.6% | 10.7 |
| சம்மாந்துறை | 54,789 100.0% | 1,942 3.5% | 14,837 27.1% | 192 0.4% | 37,638 68.7% | 160 0.3% | 99.1 |
| நிந்தவூர் | 29,006 100.0% | 126 0.4% | 7,901 27.2% | 48 0.2% | 20,894 72.0% | 37 0.1% | 24.9 |
| அக்கரைப்பற்று | 37,359 100.0% | 2,209 5.9% | 11,925 31.9% | 76 0.2% | 23,014 61.6% | 133 0.4% | 58.0 |
| திருக்கோவில் | 15,248 100.0% | 189 1.2% | 14,851 97.4% | 123 0.8% | 76 0.5% | 9 -- | 64.2 |
| பொத்துவில் | 20,152 100.0% | 1,247 6.2% | 5,127 25.4% | 119 0.6% | 13,604 67.5% | 55 0.3% | 115.9 |
| லாஹுகல | 6,252 100.0% | 5,564 89.0% | 598 9.6% | 11 0.1% | 66 1.1% | 13 0.2% | 380.2 |
| வெவகம்பத்து தெற்கு(தமணை) | 28,319 100.0% | 27,486 97.1% | 591 2.1% | 73 0.3% | 137 0.5% | 32 0.1% | 148.3 |
| தென்கிழக்கு | 277,982 100.0% | 41,393 14.9% | 75,680 27.2% | 889 0.3% | 161,140 58.0% | 881 0.1% | 920 |

அம்பாரைத் தொகுதி ஒரு தனியான மானில சபையாகப் பிரகடனப்படுத்தப்படும். மக்கள் தீர்ப்பெடுக்கும் போது சாதகமாகப் பதிலிறுக்கப்படாதவிடத்து அம்பாரைத் தேர்தல் தொகுதி ஊவாப் பிராந்தியத்தின் ஒரு பகுதியாக அமையும்.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் 1997 ஒக்டோபர் மாதம் பாராளுமன்றத்துக்கு வடக்கு கிழக்கு மாகாணப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதிகாரப் பகிர்வுக்கான பிராந்திய சபைகள் ஏற்படுத்துவது பற்றிக் கூறப்பட்டிருக்கும் ஆலோசனைகள், பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பங்குதாரர்களாகவிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு 1995 மே மாதம் 26ம் திகதி சமர்ப்பித்த ஆலோசனைகளுக்கு ஏற்புடையதாக இல்லை.

வடக்கு கிழக்கு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாரப் பகிர்வுக்கான பிராந்திய சபைகள் ஏற்படுத்தப்படும் போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்களின் பாரம்பரிய வசிப்பிடங்களை ஒன்றிணைத்த முஸ்லிம் பெரும்பான்மையாக வரக்கூடிய ஒரு பிராந்திய சபை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே இலங்கை முஸ்லிம்களின் ஏகோபித்த கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையை முக்கியமாகக் கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த ஆலோசனைகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பங்குதாரர்களாக இருக்கும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டிருப்பது பற்றி எந்த ஆட்சேபனைகளையும் உறுதியாகத் தெரிவிக்காமல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்து மௌனமாகவிருந்து வருவது முஸ்லிம்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் ஆலோசனையில் கூறப்பட்டிருக்கும் தென்கிழக்கு பிராந்தியசபை ஏற்படுத்தப்பட வேண்டுமானால் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் கட்டாயம் வடமாகாணத்தோடு ஒன்றிணைக்கப்படவேண்டும் என்பது மறைமுகமாக விதிக்கப்பட்டுள்ள

| உ.ப.அ.அ.பிரிவு | மொத்தம் | சிங்களவர் | இல.தமிழர் | இந்.தமிழர் | முஸ்லிம்கள் | ஏனையோர் | நிய்ரய்பதது |
|---|---|---|---|---|---|---|---|
| தென்கிழக்கு | 277,982<br>100.0% | 41,393<br>14.9% | 75,680<br>27.2% | 889<br>0.3% | 161,140<br>58.0% | 881<br>0.1% | 920.0 |
| வெவகம்பத்து தெற்கு(உகணை) | 82,446<br>100.0% | 79,490<br>96.4% | 1,834<br>2.2% | 512<br>0.6% | 300<br>0.4% | 310<br>0.4% | 529.9 |
| பிந்தனைப்பத்து தெற்கு | 13,523<br>100.0% | 13,250<br>98.0% | 150<br>1.1% | 10<br>0.1% | 111<br>0.8% | 2<br>-- | 266.7 |
| பிந்தனைப்பத்து வடக்கு | 13,019<br>100.0% | 12,810<br>98.4% | 162<br>1.2% | 3<br>-- | 17<br>0.1.% | 27<br>0.2% | 328.4 |
| அம்பாரை | 108,988<br>100.0% | 105,550<br>96.8% | 2,146<br>2.0% | 525<br>0.5% | 428<br>0.4% | 339<br>0.3% | 855.0 |

| | மொத்தம் | சிங்களவர் | இல.தமிழர் | இந்.தமிழர் | முஸ்லிம்கள் | ஏனையோர் | நிய்ரய்பதது |
|---|---|---|---|---|---|---|---|
| அம்பாரை | 108,988<br>100.0% | 105,550<br>96.8% | 2,146<br>2.0% | 525<br>0.5% | 428<br>0.4% | 339<br>0.3% | 855.0 |
| ஊவா மாகாணம் | 1,003,824<br>100.0% | 805,620<br>78.0% | 43,754<br>4.0% | 145,484<br>14.0% | 32,558<br>3.0% | 1,791<br>1.0% | 4131.0 |
| ஊவா,அம்பாரை | 1,140,812<br>100.0% | 911,170<br>79.9% | 45,900<br>4.0% | 146,009<br>12.8% | 32,986<br>2.9% | 2,120<br>0.4% | 4986.0 |

ஒரு கட்டாய நிபந்தனை. அப்படி இணைக்கப்படும் போது மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களின் அரசியல் அந்தஸ்திற்கு மிகப் பாரதூரமான பாதங்கள் நிச்சயம் ஏற்படுவது மட்டுமல்லாமல் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் வடமாகாணத்தோடு ஒன்றிணைக்கப்படாவிட்டால் முஸ்லிம்கள் அதிகப்படியான தென்கிழக்குப் பிராந்தியசபை அம்பாறை மாவட்டத்தில் ஏற்படாமல் நிராகரிக்கப்பட்டு விடும் என்பது மற்ற ஏமாற்று நடவடிக்கை. இந்த இரண்டு விடயங்களும் ஏற்படாமற்போகும் பட்சத்தில் இன்று தற்காலிகமாக இணைக்கப்பட்டிருக்கும் வடகிழக்கு மாநிலம் பிரிக்கப்பட்டு வடமாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் தனித்தனி பிராந்திய சபைகள் ஏற்படுத்தப்படுவதுதான் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அந்தரங்கத் திட்டம். ஐக்கிய தேசியக்கட்சி மங்கள முனசிங்கப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் முன்வைக்கப்பட்ட திட்டத்திற்கும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இறுதியாக முன்வைத்துள்ள ஆலோசனைகளுக்கும் எதுவித வேறுபாடுமில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒரு முக்கிய அம்சமாகும். இந்தச் சதித்திட்டத்தினால் தமிழர் கோரும் ஓரளவுக்கேனும் ஒன்றினைந்த வடகிழக்குப் பிராந்திய சபை நிராகரிக்கப்படுவதோடு முஸ்லிம்கள் ஏகமனதாகக் கோரும் முஸ்லிம் பெரும்பான்மை தென்கிழக்குப் பிராந்தி சபையும் நிராகரிக்கப்படுகின்றன.

இது இப்படி இருக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற தெரிவுக்குழு பிரதிநிதிகள் ஜனாப் றஊப் ஹக்கீம், ஜனாப் எம்.எம்.சுஹைர் அரசாங்க ஆலோசனைகளில் திருத்தங்களை ஏற்படுத்தப் பின்வரும் பிரேரணைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

(அ) வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தற்போதைய நிலையில் மக்கள் தீர்ப்பொன்றை அறிந்து கொள்வதற்கான சுதந்திரமானதும் நேர்மையானதுமான முறையில் கருத்துக் கணிப்புக்கான வாக்கெடுப்பை நடாத்துவதற்கான சூழ்நிலை இல்லாதிருக்கும்

காரணத்தால், கூறப்பட்ட வாக்கெடுப்பை நிலைமை சீராகும்வரை காலவரையறையின்றி ஒத்திப் போடுவது ஆலோசனையில் கூறப்பட்டுள்ள பிராந்திய சபைகள் ஏற்படுத்தப்பட்டு ஜனநாயக நடவடிக்கைகளை மீண்டும் ஏற்படுத்துவதைத் தாமதப்படுத்தும்.

(ஆ) இன்றைய யுத்த நெருக்கடி நிலையில் கருத்துக் கணிப்புக்கான வாக்கெடுப்பு தாமதிக்கப்படுவதால் ஆலோசனையில் கூறப்பட்டுள்ள பிராந்திய சபைகளை சட்டரீதியாக உடனடியாக ஏற்படுத்தி ஜனநாயக நடவடிக்கை நிறுவனங்களைச் செயற்படுத்த உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(இ) ஆலோசனைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக் கணிப்புக்கான வாக்கெடுப்பு நிலைமை வழமைக்குத் திரும்பி ஒரு வருடத்துக்குள் கட்டாயம் நடாத்தப்பட வேண்டும்.

(ஈ) மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் நடைபெற வேண்டிய கருத்துக் கணிப்புக்கான வாக்கெடுப்பு இந்த இரு மாவட்டங்களும் அரசாங்க ஆலோசனைகளில் கூறப்பட்டிருப்பது போல் வடமாகாணத்தோடு ஒன்றிணைக்கப்படுவதற்குச் சம்மதமா? என்பதோடு அம்பாரை தேர்தல் தொகுதியல் நடாத்தப்படும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் போது கேட்கப்படுவது போன்று மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் ஒரு தனிப்பிராந்திய சபையாக இருக்க வேண்டுமா? என்ற கருத்துக் கணிப்பும் நடாத்தபட வேண்டும்.

(உ) ஆலோசிக்கபட்டிருக்கும் தென்கிழக்கு பிராந்திய சபையிலும் அதே பாங்கான முறையில் தனிப்பிராந்திய சபையாக இருக்க வேண்டுமா என்பது பற்றிக் கருத்துக் கணிப்புக்கான வாக்கெடுப்பும் நடைபெற வேண்டும்.

(ஊ) எல்லா மாநில சபைகளிலும் உள்ள சிறுபான்மை சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் அனைவருக்கும் கீழ்க்காணும் பாதுகாப்பும், விசேட சலுகைகளும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

(i) அரசாங்க மூலவளங்களில் கூடுதலான பங்கு.
(ii) பிராந்திய சபைப் பிரதிநிதித்துவத்தில் கூடுதலான பங்கு.
(iii) சிறுபான்மை இனத்தவரின் நலன்களைப் பாதிக்கக்கூடிய விடயங்களில் இரட்டைப் பெரும்பான்மை நிர்ணயமுறை பின்பற்றப்படல் வேண்டும்.

(எ) நிறைவேற்றுக் குழுமுறையைத் திருப்திகரமாகவும், நல்ல முறையில் பயனளிக்கக்கூடிய வகையிலும் நடைமுறைப் படுத்தக்கூடிய வகையில் எல்லாப் பிராந்திய சபைகளுக்கும், நிலப்பரப்பு, சனத்தொகைகளில் தங்கியிராது, சமமான அங்கத்தவர்களைக் கொண்ட மந்திரி சபைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்கான அரசாங்கத்தின் ஏனைய ஆலோசனைகள் பற்றிய எமது கருத்துக்களை தேவைப்படும் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பிக்கும்.

மேற்கூறப்பட்ட திருத்தப் பிரேரணையில் அம்பாரைத் தேர்தல் தெகுதியில் நடாத்தப்படும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் போது கேட்கப்படுவது போன்று மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்கள் ஒரு தனிப்பிராந்திய சபையாக இருக்க வேண்டுமா? என்ற கருத்துக் கணிப்பும் நடாத்தப்பட வேண்டும் என்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளின் கோரிக்கை - (ஈ) பந்தியில் முன் வைத்திருப்பது, <u>மட்டக்களப்பு திருகோணமலை மாவட்ட மக்களில் பெரும்பான்மை வாக்காளர்கள் சம்மதித்தால் அங்கு ஒரு தனிப்பிராந்திய சபை ஏற்படுத்த வேண்டும் என்று மறைமுகமாகக் கோரப்படும் ஒரு முக்கிய கோரிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.</u>

யுத்தத்தின் காரணமாகக் கிழக்கு மாகாணத்தின் இன்றைய நிலையில் மக்கள் கருத்தை கணிக்கக்கூடிய சுதந்திரமான, நேர்மையான வாக்கெடுப்பு நடத்தக்கூடிய சூழ்நிலை

இல்லாதிருப்பதைக் காரணமாகக் காட்டி அரசாங்க ஆலோசனைப்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் கூறப்பட்டிருக்கும் பிராந்திய சபைகளைச் சட்டப்படி உடனடியாக ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தும்படியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றத் தெரிவுக்குழு அங்கத்தவர்களின் கோரிக்கை பந்தி (அ) வில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்க ஆலோசனையில் உள்ள முதலாம் அட்டவணையில் வடகிழக்கு, தென்கிழக்கு, வடக்கு, கிழக்கு - அம்பாரை ஆகிய பிராந்திய சபைகள் மட்டுமே உத்தேசிக்கப்பட்டுள்ள பிராந்தியசபைகள். மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களை ஒன்றிணைத்த ஒரு தனிப்பிராந்திய சபைபற்றி அரசாங்க ஆலோசனைகளில் எவ்விடத்திலும் கூறப்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய அம்சமாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளின் கோரிக்கைப்படி அரசாங்க ஆலோசனைகளில் உத்தேசிக்கப்பட்டுள்ள பிராந்திய சபைகளை உடனடியாகச் சட்டபூர்வமாக ஏற்படுத்துவதானால் வடமாகாணத்தோடு மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களையும் ஒன்றிணைத்த வடகிழக்குப் பிராந்திய சபை, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளை ஒன்றிணைத்த தென்கிழக்குப் பிராந்திய சபை, அம்பாரைத் தேர்தல் தொகுதியில் அம்பாரைப்பிராந்திய சபை, அல்லது வடமாகாணத்துக்கு வடபிராந்திய சபை, கிழக்கு மாகாணத்துக்கு கிழக்கு பிராந்திய சபைகள்தான் ஏற்படுத்த முடியும். அப்படியானால் மட்டக்களப்பு திருகோணமலை முஸ்லிம்களின் கதி என்ன?.

ஒரு பேச்சுக்காவது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகள் கோருவது போன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தநிலை காரணமாகக் கருத்துக் கணிப்புக்கான வாக்கெடுப்பை

நடத்தாமலே சட்டரீதியாக உத்தேசிக்கப்பட்ட பிராந்திய சபைகளை ஏற்படுத்தினால், அந்தந்த பிராந்திய சபைகளுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யக்கூடிய தேர்தல்களையும் அதேகாரணமான தற்போதுள்ள யுத்தநிலை சூழ்நிலையில் எப்படி நடத்த முடியும் என்பதும் அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுக்காமல் பிராந்திய சபைகளை எப்படிக்கூட்டுவது? என்பதும் சர்வசாதாரணமாக எவரும் கேட்கக்கூடிய கேள்வியாகும்?.

இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்களால் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் ஆறுபேர் இருக்கின்றனர். ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தற்போது அங்கத்துவம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் எவரும் முஸ்லிம்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் அல்ல. மக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றத் தெரிவுக்குழு 1995 மே மாதம் 26ஆம் திகதி முன்வைத்த பிரேரணையில் கோரப்பட்டுள்ளவாறான முஸ்லிம்கள் அதிகப்படியான பிராந்திய சபைப்பற்றித் திருத்தப் பிரேரணையில் எதுவும் கூறப்படாதது அவ்வாறான கோரிக்கையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முற்றாகக் கைகழுவிவிட்டது என்னும் தப்பபிப்பிராயத்தை முஸ்லிம்களிடையே குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

அடுத்தது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் திருத்தக்கோரிக்கை (இ) பந்தியில் நிலைமை வழமைக்குத் திரும்பி ஒரு வருடத்துக்குள் உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்துக் கணிப்புக்கள் கட்டாயம் நடைபெற வேண்டும் என்று கூறப்படுகிறது. தற்போதைய யுத்தம் முடிவடைந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலைமை வழமைக்கு எப்போது திரும்பும் என்பதை இன்றைய நிலையில் எப்படித் திட்டவட்டமாகக் கூறமுடியும் என்னும் விஷயம்.

ஆகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றத் தெரிவுக்குழுப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் திருத்தக் கோரிக்கைகள் முன்னுக்குப்பின் முரணானதாகவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன் வைத்துள்ள பிரேரணைகளுக்கு ஏற்புடையனவாகவுமில்லை.

ஒன்றிணைந்த மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டத்தின் 1981ஆம் ஆண்டுக் குடிசன மதிப்புப்படி 108,900 - 18.0% சிங்களவர்களும் 332,160 - 55.0% தமிழர்களும், 158,852 - 26.2% முஸ்லிம்களும் 4,753 - 0.8% ஏனையோரும் மொத்தம் 604,365 பேர் உள்ளனர். வடமாகாணத்தோடு திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் ஒன்றிணைக்கப்படும் போது 1,353,166 - 79.0% தமிழர்களும், 144,028 - 8.4% சிங்களவரும் 209,380 - 12.2% முஸ்லிம்களும், 4,475 - 0.8% ஏனையோரும் மொத்தம் 1,713,769 பேர் இருப்பர்.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் வடமாகாணத்தோடு ஒன்றிணைக்கப்படும்போது 26.2% மான முஸ்லிம்கள் விகிதாசார 12.2% மாக வீழ்ச்சியடையும். கிழக்க மாகாணம் வடமாகாணத்தோடு ஒன்றினைக்கப்பட்ட போது 32.2% மான முஸ்லிம்களின் விகிதாசாரம் 17.6 வீதமாக வீழ்ச்சியடைந்ததை கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அனைவரும் மிக வன்மையாக எதிர்த்தது நியாயம் என்று ஏற்றுக் கொண்டால் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அனைவரும் வடமாகாணத்தோடு திருகோணமலை, மட்டக்களப்பு, மாவட்டங்கள் ஒன்றிணைவதையும் அதேவிதமாக மிக வன்மையாக எதிர்ப்பதுதான் நியாயம். ஆனால் இப்படியான எதிர்ப்பு அம்பாரை மாவட்டத்தில் ஏற்படுத்துவதற்கான அரசாங்க ஆலோசனைகளில் விபரிக்கப்பட்டிருக்கும் தென்கிழக்குப் பிராந்தியம் ஏற்படுவதற்குப் பெருந்தடையாகவே அமையும், என்பது நிச்சயம். ஆகவே மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்திருக்கும் ஆலோசனைப்படி முஸ்லிம்கள் அதிகப்படியான தென்கிழக்கு பிராந்திய சபையும் ஏற்படப்போவதில்லை. மட்டக்களப்பு,

திருகோணமலை மாவட்டங்கள் ஒன்றிணைந்த கிழக்குப் பிராந்திய சபையும் ஏற்படப்போவதில்லை.

**வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு அதிகாரப்பகிர்வுக்கான அமைப்புப் பற்றிய பிரேரணைகள்.**

(I) முஸ்லிம்கள் ஏகமானதாக முன்வைத்துள்ள தென்கிழக்குப் பிராந்திய சபை - அம்பாரை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளை அடித்தளமாகக் கொண்டு மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மைப் பிரதேசங்களையும் ஒன்றிணைத்த பிராந்தியம்.

(II) அம்பாரை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளை ஒன்றிணைத்த அரசாங்க ஆலோசனையில் கூறப்பட்டிருக்கும் தென்கிழக்குப் பிராந்தியசபை.

(III) திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை ஒன்றிணைத்த கிழக்குப் பிராந்தியசபை.

முஸ்லிம்கள் ஏகமனதாகக் கோரியுள்ள மேலே பந்தி (I)ல் குறிப்பிடப்பட்டுள்ள தென்கிழக்குப் பிராந்திய சபைதான் ஒரு திருப்திகரமான பிரேரணை. நிலத்தொடர்பற்றது என்ற ஒரேயொரு காரணத்துக்காக அப்பிரேரணை நிராகரிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனினும் தீர்வு ஏற்படுவதற்காக அரசாங்க ஆலோசனையில் கூறப்படும் தென்கிழக்குப் பிராந்திய சபையை ஒரு மாற்றீடாக ஏற்படுத்துவதானால் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை ஒன்றிணைத்து கிழக்குப் பிராந்திய சபையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். கிழக்கு மாகாணத்துக்கு ஒரு தனியான பிராந்திய சபை ஏற்படுவதையோ அல்லது மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் வடமாகாணத்தோடு இணைக்கப்படுவதையோ முஸ்லிம்கள் ஒருக்காலும் ஏற்கக்கூடாது.

## 2. தேர்தல் முறைசார் சீர்திருத்தங்கள்

1978ஆம் ஆண்டின் ஐக்கிய தேசியக் கட்சி, ஜயவர்தன அரசியல் யாப்பில் தேர்தல்முறை குறித்துச் செய்யப்பட்ட பின்வரும் ஏற்பாடுகள் முஸ்லிம்களுக்குப் பெரும் அநீதியை ஏற்படுத்தியது.

இலங்கையை இருபத்து இரண்டு தேர்தல் மாவட்டங்களாக பிரித்தமைத்தது.

மாகாணத்தின் சனத்தொகைக்கோ, நிலப்பரப்புக்கோ எவ்வித கவனமும் செலுத்தாது ஒவ்வொரு மாகாணத்துக்கும் நான்கு பிரதிநிதிகள் என்ற ரீதியில் 36 அங்கத்தவர்களும், 1976ஆம் ஆண்டின் தேர்தல் தொகுதிகளை மாற்றாமல் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட 160 தேர்தல் தொகுதிவாரியாகத் தெரிவு செய்யும் பிரதிநிதிகள் எண்ணிக்கையைத் தொடர்ந்தும் அனுமதித்து அத்தோடு தேசியப்பட்டியல் மூலம் 29 பிரதிநிதிகளும் சேர்க்கப்பட்டு மொத்தம் 225 பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றம் ஏற்படுத்தப்பட்டது.

விகிதாசாரப் பிரதிநிதித் தேர்தல் முறையில் ஒரு வாக்காளர் தமது விருப்பத்தெரிவை ஒரு கட்சியினது அல்லது சுயேட்சைக் குழுவினது மூன்று அங்கத்தவர்களுக்கு தனித்தனியாகக் கொடுக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு. எந்தவொரு தேர்தல் மாவட்டத்திலும் ஏதாவதொரு தேர்தலில் அளிக்கப்பட்ட செல்லுபடியான மொத்தவாக்கு எண்ணிக்கையில் 5 சகவிகிதத்திற்கும் குறைவாகப் பெற்றுக்கொள்ளும் போது அக்கட்சிக்கு / சுயேச்சைக் குழுவுக்குக் கிடைத்த வாக்குகள் நிராகரிக்கப்பட்டு கிடைத்த வாக்குகள் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தகுதியை இழந்து விடுவது.

இடைத்தேர்தலுக்கு விகிதாசாரத் தேர்தல் முறையை பிரயோகிக்க முடியாது. வெற்றிடங்கள் ஏற்படும் போது வாக்காளர் அபிப்பிராயத்துக்கு எவ்வித மதிப்புமின்றி கட்சி விசுவாசிகளைக்

கொண்டு அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படுதல்.

பொதுசன ஐக்கிய முன்னணி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 1978ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஜே.ஆர். ஜயவர்த்தன அரசியல் யாப்பு மூலம் அறிமுகப்படுத்திய தேர்தல் முறையை முற்றாக மாற்றிப் பின்வரும் தேர்தல் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்கான மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றது.

(அ) பாராளுமன்றத்தின் அரைவாசி அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகளிலிருந்து (FPP) முறையிலும், எஞ்சிய அரைவாசி அங்கத்தவர்கள் விகிதாசாரத் தேர்தல் (PR) முறையிலும் தெரிவு செய்யப்படுதல்.

(ஆ) ஒவ்வொரு வாக்காளர்களுக்கும் இரண்டு வாக்குகள் கொடுக்கப்பட்டு, ஒன்று தொகுதி வாரியான (FPP) முறையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கும். மற்றது விகிதாகார (PR) முறையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கும் பாவிக்கப்படும்.

(இ) ஜேர்மன் முறையில் இருப்பது போன்று பாராளுமன்றத்தில் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவொன்று கொண்டிருக்கும் பிரதிநிதிகளின் தொகை விகிதாசாரத் தேர்தல் (PR) முறையால் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளைக் கொண்டு நிர்ணயித்தல்.

(ஈ) இடைத் தேர்தல் நடத்துவது.

மக்கள் அங்கீகாரத்தைப் பெற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஆதாரவோடு ஆட்சியமைத்த பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1995 ஆகஸ்ட் மாதம் பின்வரும் ஆலோசனைகளை முன்வைத்தது.

(அ) பாராளுமன்றத்துக்கு 198 பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்.

(ஆ) 99 பிரதிநிதிகள் தேர்தல் தொகுதிகளிலிருந்து (FPP) சுதந்திரமான மக்கள் வாக்களிப்பு மூலம் தெரிவு செய்தல்.

(இ) 99 பிரதிநிதிகள் மானில விகிதாகாரத் தேர்தல் (PR) முறை மூலம் தெரிவு செய்யப்படுதல்.

(ஈ) இரு வாக்குச் சீட்டுகள் - ஒன்று தேர்தல் தொகுதிகளிலிருந்து சுதந்திரமான மக்கள் வாக்கெடுப்பு (FPP) முறையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கும் மற்றது மாநில விகிதாசார (PR) முறையிலும் கட்சி சுயேட்சைக் குழுவைத் தெரிவு செய்வதற்கும் பாவித்தல்.

(உ) இடைத்தேர்தல் நடத்துவது

(ஊ) வெட்டுப் புள்ளியையும் போனஸ் சீட்டையும் முற்றாக நீக்குதல்.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பிரதான கட்சிப் பிரதிநிதிகள் 1976ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட தேர்தல் தொகுதிகளை அப்படியே வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், 1978ஆம் அண்டு ஐக்கிய தேசியக் கட்சி அறிமுகம் செய்த விகிதாசாரத் தேர்தல் முறை தொடர்ந்தும் அமுலில் இருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தியதன் காரணமாக 1997 ஜுலை மாதம் நடந்த மந்திரி சபையின் அங்கீகாரத்தோடும், அதே மாதம் 14ம், 15ம் திகதிகளில் களுத்துறை மாவட்டத்திலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடந்த பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கப் பிரமுகர்களின் கருத்தரங்கின் போதும் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படியும் பொதுசன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் அரசாங்கம் 1995ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முன்வைத்த ஆலோசனைகள் யாவும் ரத்துச்செய்யப்பட்டன. குறிப்பிட்ட மந்திரிசபைக் கூட்டத்திலும் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடந்த கூட்டத்திலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் கலந்து கொண்டு இக்கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்குப் பூரண அங்கீகாரம் கொடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடைசியாக 1997 ஒக்டோபரில் பாராளுமன்றத் தெரிவுக் குழு முன்வைத்திருக்கும் தோதல் முறைச் சீர்திருத்தங்களுக்கான

ஆலோசனைகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி 1978ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய தேர்தல் முறைக்கும் எந்தவித மாற்றமுமில்லை. இது பொதுசன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த ஆலோசனைகளுக்கும் ஏற்புடையனவாக இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி அறிமுகப்படுத்திய தேர்தல் மாவட்டங்களும், விகிதாசாரத் தேர்தல் முறையும் முன்பிருந்த ஏறக்குறைய 40 தொகுதிகளில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கக்கூடிய முஸ்லிம் வாக்குப் பலம் சின்னாபின்னமாக சிதறடிக்கப்பட்டு இன்று வெறும் செல்லாக்காசாக்கப் பட்டுள்ளது.

இன்றுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் வேறு சமூகங்களோடு ஒப்பிடுகையில் 11 தேர்தல் மாவட்டங்களில் முஸ்லிம் வாக்காளர்களின் விகிதாசாரம் 5% ஐ விடவும் குறைவானதாகவே உள்ளது. இந்தத் தேர்தல் மாவட்டங்களில் முஸ்லிம்கள் பூரண ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி வாக்காளர்கள் அனைவரும் ஒருமுகமாக முஸ்லிம் அபேட்சகர்களைக் கொண்ட ஒரு கட்சிக்கோ அல்லது சுயேட்சைக் குழுவுக்கோ வாக்களித்தாலும் தேவைப்படும் ஆகக்குறைந்த விகிதாசாரத்தை எட்ட முடியாது. ஆகவே முஸ்லிம் சமூகத்தின் அரைவாசிப் பேர் தம்மை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய அபேட்சகர்களைத் தெரிவு செய்யும் தகுதியை இழந்து விடுகின்றனர். இந்த அநியாயம் பற்றி பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கத்துவம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் எந்தக் கருத்தையும் தெரிவித்ததாக பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் 1997 ஒக்டோபரில் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்த பிரேரணையில் குறிப்பிடப்படவில்லை.

ஐக்கிய தேசியக்கட்சி 1978ஆம் ஆண்டு ஜயவர்தன யாப்பு மூலம் அறிமுகப்படுத்திய விகிதாசாரத் தேர்தல் முறையும் தேர்தல் தொகுதிகள் நிர்ணயமும் இலங்கை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்திய பாதங்களை ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி தேசபந்து மாஹும்

எம்.ஏ.எம்.ஹுசைன் அவர்கள் எழுதிய ஆய்வுக்கட்டுரையில் மிகவும் தெட்டத்தெளிவாக விளக்கியுள்ளார்கள். இந்த அநியாயங்களிலிருந்து முஸ்லிம்களைப் பாதுகாப்பதுதான் அன்னாருக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொடுக்கும் பொருத்தமான கௌரவமாகும்.

[illegible]

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த ஆலோசனைகளுக்கும் ஏற்புடையனவாக இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி அறிமுகப்படுத்திய தேர்தல் மாவட்டங்களும், விகிதாசாரத் தேர்தல் முறையும் முன்பிருந்த ஏறக்குறைய 40 தொகுதிகளில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கக்கூடிய முஸ்லிம் வாக்குப் பலம் சின்னாபின்னமாக சிதறடிக்கப்பட்டு இன்று வெறும் செல்லாக்காசாக்கப் பட்டுள்ளது.

இன்றுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் வேறு சமூகங்களோடு ஒப்பிடுகையில் 11 தேர்தல் மாவட்டங்களில் முஸ்லிம் வாக்காளர்களின் விகிதாசாரம் 5% ஐ விடவும் குறைவானதாகவே உள்ளது. இந்தத் தேர்தல் மாவட்டங்களில் முஸ்லிம்கள் பூரண ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி வாக்காளர்கள் அனைவரும் ஒருமுகமாக முஸ்லிம் அபேட்சகர்களைக் கொண்ட ஒரு கட்சிக்கோ அல்லது சுயேட்சைக் குழுவுக்கோ வாக்களித்தாலும் தேவைப்படும் ஆகக்குறைந்த விகிதாசாரத்தை எட்ட முடியாது. ஆகவே முஸ்லிம் சமூகத்தின் அரைவாசிப் பேர் தம்மை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய அபேட்சகர்களைத் தெரிவு செய்யும் தகுதியை இழந்து விடுகின்றனர். இந்த அநியாயம் பற்றி பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கத்துவம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் எந்தக் கருத்தையும் தெரிவித்ததாக பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் 1997 ஒக்டோபரில் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்த பிரேரணையில் குறிப்பிடப்படவில்லை.

ஐக்கிய தேசியக்கட்சி 1978இல் அன்று ஜயவர்தன யாப்பு மூலம் அறிமுகப்படுத்திய விகிதாசாரத் தேர்தல் முறையும் தேர்தல் தொகுதிகள் நிர்ணயமும் இலங்கை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்திய பாதகங்களை ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி தேசபந்து மாஹரூம்

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்
# அரசியலமைப்புச் சீர்திருத்தம்
# தொடர்பான பாராளுமன்றத்
# தெரிவுக்குழுவுக்கு 1995 மே 26ம் திகதி
# சமர்ப்பித்த பிரேரணைகளின் சாராம்சம்

# 1. முன்னுரை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தம் அடிப்படை ஜனநாயக உரிமைகளின் சீரழிவு மற்றும் நாட்டின்மீது பெருஞ்சுமையாக மாறியுள்ள யுத்தம் என்பவற்றுக்கு இட்டுச்சென்றுள்ள பாரிய பிரச்சனைகள் சிலவற்றைத் தீர்ப்பதற்கான முழுமையான நடவடிக்கையின் ஒரு பகுதியென எண்ணுகின்றது.

1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பு தற்போதுள்ள நெருக்கடியைத் தீவிரமாக்கியுள்ள பிரதான காரணிகளுள் ஒன்றெனக் கூறலாம். ஒரு சில குறிப்பிட்ட தனிநபர்களையும் அரசியற் கட்சிகளையும் தொடர்ந்து பதவியில் வைத்துக் கொள்வதற்காக வகைதொகையின்றி அரசியயலமைப்புக்கான திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஒருவசதியான பாராளுமன்றப் பெரும்பான்மையைத் துஷ்பிரயோகம் செய்தமைக்கான விலையை நாடு இன்று செலுத்திக்கொண்டிருக்கின்றது.

அரசியலமைப்பு மாற்றங்களுக்கான அணுகுமுறை விவேகமற்ற, குறுகிய கட்சி மனப்பான்மை கொண்ட ஒன்றாக இருக்கக்கூடாது. நடைமுறைச் சாத்தியமான அளவுக்கு சட்டசபை உறுப்பினர்கள் பரந்துபட்ட, தேசியக்குறிக்கோள்களை மனதிலிருத்தி, உத்தேச மாற்றங்களின் நோக்கங்கள், குறிக்கோள்களைத் தெளிவாக இனங்காணுதல் வேண்டும். குறித்துரைத்த திசைமார்க்கம் இல்லாது போனால், அரசியலமைப்புச் சீர்த்திருத்தம் ஒரு பயனற்ற முயற்சியாகவே முடியும்.

அரசியலமைப்புச் சீர்த்திருத்தத்தின் ஒவ்வொரு படிநிலையிலும், அரசியலமைப்பு என்பது நாட்டின் சகல மக்கட் பிரிவினருக்கும் உரிய ஒன்றாகுமென்பதை நினைவிற்கொள்வது மிக முக்கியமானதாகும். பாரிய தனிப்பட்ட நலன்கள் தேசிய நலன்களை மீறிநிற்கும் சாத்தியப்பாட்டுக்கு எதிராகப் பாதுகாத்துக் கொள்ளுவதும் அவசியமாகும்.

இறுதியில் ஆய்வில், புதிய அரசியலமைப்பு சகல மக்களினதும் உண்மையான அபிலாஷைகளையும் கனவுகளையும் பிரதிபலிக்க வேண்டும்.

எனவே நாம் பின்வரும் விடயங்களில் கருத்தாயிருப்பது அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1. இலங்கை மக்களென்று கூறும்பொழுது தெளிவாக வரையறுக்கப்பட்ட, சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் இந்திய வம்சாவளித் தமிழர்களென நான்கு சமூகங்களை அது உள்ளடக்குகின்றது. இவர்களுக்குத் தெளிவாக வரையறுக்கப்பட்ட, தனித்துவமான வரலாற்று, கலாசார மற்றும் மதப் பாரம்பரியங்கள் உண்டு.

2. இப்பன்மைப் பாங்குகளைப் பாதுகாப்பதும் முன்னேற்றுவதும் அரசியலமைப்பின் இரு நோக்கங்களாக அமைவதோடு, தமது தனித்துவ வாழ்க்கை முறைகளைக் கொண்ட இப்பல்வேறுபட்ட மக்கட் குழுக்களிடையே ஐக்கியத்தையும் சௌஜன்யத்தையும் உருவாக்கவும் வேண்டும்.

3. தனித்துவமுள்ள ஜன சமூகங்கள் அர்த்தமுள்ள சமத்துவத்தை அனுபவித்து ஒன்றாக வாழ்வதற்கு அரசியலமைப்பு வழிசமைப்பதோடு, வழிநடத்தவும் வேண்டும்.

4. அரசியலமைப்புச் செயல்முறையின் செயற்பாடு ஒவ்வொரு ஜன சமூகம் மற்றச் ஜன சமூகத்தின் மீது தொடர்ச்சியாகத் தங்கிவாழும் சகோதரத்துவ உணர்வையும் தோற்றுவிக்க வேண்டும்.

5. ஒவ்வொரு பிரஜையும் இன, மத, ஜாதி மற்றும் மொழி அடிப்படையிலான பேதங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில், நாட்டின் அதியுயர் அதிகாரத் தானத்திற்கு வருதல் இயலும் என்னும் வாக்குறுதியை அரசியலமைப்பு வழங்கி நிற்றல் வேண்டும்.

6. அரசியலமைப்பு, அரச நிர்வாகத்தின் பல்வேறு மட்டங்களில் பல்வேறு ஜனசமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களிடையே அதிகாரப் பகிர்வைச் சாத்தியமாக்குதல் வேண்டும்.

7. தேசிய மட்டத்தில் அதிகாரப் பகிர்வு சில ஜனசமூகங்களைச் சேர்ந்த ஒரு சில தனிநபர்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருத்தல் கூடாது. அதிகாரப் பகிர்வு ஜனசமூக மட்டங்களுக்குச் சென்றடைவதோடு சகல ஜன சமூகங்களும் அதிகாரப்பகிர்வை அனுபவிக்க வேண்டும். ஜனசமூகங்கள் அடி மட்டங்களில், தங்கள் சொந்த விவகாரங்களைத் தாமே தீர்மானிக்கும் உரிமை பெற்றிருப்பதோடு, இவ்வுரிமை தேசிய மட்டத்தில் பெரும்பான்மையினருக்கு மாத்திரமின்றிச் சிறுபான்மை ஜனசமூகங்களுக்கும் இருத்தல் வேண்டும்.

8. பெரும்பான்மை, சிறுபான்மைச் சனசமூகங்களிடையே வேறுபடுத்திப் பார்க்கும் காலத்துக்கொவ்வாத, நாசகரமான கண்ணோட்டத்தை ஒழித்துக்கட்டி இலங்கையர் என்னும் தனித்துவம் சகல மக்களுக்கும் கிட்டுவதை உறுதி செய்வது அரசியலமைப்பின் இறுதி இலட்சியமாக அமைதல் வேண்டும்.

9. அர்த்தமுள்ள அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் இலங்கையரான சகல ஜன சமூகங்களும் கௌரவத்தோடு, சமாதானமாக, சௌஜன்ய வாழ்வு நடத்துவதற்கு நம்பிக்கை ஒளியை வழங்குமென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுதியாக நம்புகின்றது.

10. ஆகவே, ஒரு புதிய அரசியலமைப்பின் பூரணமான நிறைவுபெற்ற ஏற்பாடுகளையே ஸ்ரீ.ல.மு.கா ஆதரிக்குமென்று நாம் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம். அரசாங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட வரைவுப் பிரேரணைகளையும் அவற்றுக்குப் பொதுமக்களிடமிருந்து கிடைத்த பிரதிப்பேறுகளையும் கவனமாக ஆய்வு செய்த பின்னரே எமது பிரேரணைகளை வகுத்தமைத்துள்ளோம்.

11. புதிய அரசியலமைப்பு, பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தினதும், இறுதிப்பாராளுமன்றப் பொதுத் தேர்தலின்போதும் குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலின் போதும் மக்களிடமிருந்து கிடைத்த வரலாறு கண்டிராத மாபெரும் அங்கீகாரத்தினதும் சட்டகத்தினுள் இடம்பெறாவிடில் பொதுமக்களின் ஆதரவைப் பெறமுடியாது என்ற உண்மையையும் எமது பிரேரணைகள் கவனத்திற்கெடுத்துள்ளன.

### 2. நிறைவேற்று ஜனாதிபதி பதவி

தற்போதைய அரசியலமைப்பின் அம்சமாக விளங்கும் நிறைவேற்று ஜனாதிபதிப்பதவி குறித்து ஆரம்பத்தில் சிந்தித்தது, ஒரு பயனுறுதிமிக்க அரசியல் தலைமைத்துவத்தை உறுதிப்படுத்தி, ஒரு ஸ்திரமான அரசாங்கத்தைப் பேணுவதற்காகவுமே. ஒரு தொழினுட்ப அர்த்தத்திலேனும் நிறைவேற்று ஜனாதிபதி ஒரு தேசியக்கூட்டுமுயற்சியின் சிருஷ்டி என்னும் சாதகமான அம்சமும் இருந்தது. கடந்த காலத்தில், நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி, பல தனிநபர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டபோதிலும், தேசிய அபிவிருத்திக்கு ஒரு பயனுறுதியுள்ள கருவியாக விளங்கியுள்ளது. தேசிய நெருக்கடிமிக்க காலகட்டங்களின்போது விரைவான தீர்மானங்களை மேற்கொள்ளுவதற்கு இது ஒரு பயனுள்ள ஏற்பாடாகும்.

நிறைவேற்று ஜனாதிபதி வகிப்பது ஒரு பதவியென்ற வகையில், முஸ்லிம் சிறுபான்மையோர் மனங்களில் அது, அரசியல் அதிகாரத்தை நாடுவோருக்குத் தமது உதவியும் தேவை என்னும் புலன்விளக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆகவே, நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை ஒழிப்பதென்பது இப்பிரிவினர் பிரதான அரசியல் நீரோட்டத்திலிருந்து அன்னியப்படுவதற்கும், சிறுபான்மையோர் தேவைகள், நலன்களைப் பாதுகாக்கும் ஒரு செயல்முறைமை இல்லாமற்போவதற்கும் இட்டுச்செல்லக்கூடும்.

அதிகார துஷ்பிரயோகங்களைக் காரணங்காட்டி நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை ஒழிக்கவேண்டுமென்று கோருவோர், இதேவிதமான அரசியல் அதிகார துஷ்பிரயோகம் பிரதமர்கள் தலைமையிலான அரசாங்கங்களிலும் இடம் பெறக்கூடுமென்பதை மறுக்கவில்லை. நிறைவேற்று ஜனாதிபதிகளைவிடச் சர்வாதிகாரப் போக்குக் கொண்ட பிரதமர்கள் இருந்துள்ளனர் என்ற வாதத்தை அரசியலமைப்புச் சட்டவறிஞர்கள் மறுத்ததில்லை.

அரசியலமைப்புச் சீர்திருத்தப் பிரயோகம் இடம்பெறும் நேரத்தையும் ஸ்ரீ.ல.மு.கா கவனத்திலெடுத்துள்ளது. விசேடமாக, நாட்டைப் பிளவுபடுத்தியழிக்கும் அச்சுறுத்தல் நிறைந்த, பாரதூரமான யுத்தமொன்று இடம்பெறும் நேரத்தில் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை ஒழிப்பது பொருத்தமற்றதென நாம் தீவிரமாக நம்புகின்றோம்.

ஆயினும், நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியொழிப்பு சமகாலத்தில், சிறு பான்மை ஜனசமூகங்கள் பொறுப்புமிக்க பாத்திரங்களை வகிக்கும் சக்திமிக்க ஒரு பாராளுமன்றத்தின் உருவாக்கத்துக்கு வழிசமைக்குமென்றால் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி ஒழிக்கப்படவேண்டுமென்ற தேசிய நல்லிணக்கத்தோடு ஒத்துழைப்பதற்கு ஸ்ரீ.ல.மு.கா தயாராகவுள்ளது.

ஆரம்பத்தில் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை விரைவில் ஒழிக்கவேண்டுமென்று வாதிட்டவர்கள் 1978இன் அரசியலமைப்பு ஏற்பாடுகள் ஒரு சக்திமிக்க ஜனாதிபதியையும் பலமற்ற பாராளுமன்றத்தையும் உருவாக்கியதென்பதை மறந்துவிடுதல் ஆகாது. பாராளுமன்றத்தைப் பலப்படுத்தாது ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதென்பது ஒரு தேசிய நெருக்கடிக் காலகட்டத்தில் நாட்டில் ஒரு சக்திமிக்க ஜனாதிபதியோ அல்லது ஒரு சக்திமிக்க பாராளுமன்றமோ இல்லாத ஒரு நிலைக்கே இட்டுச் செல்லும். எனவே, பாராளுமன்றத்தைப் பலப்படுத்துவதும்

சிறுபான்மையோர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதுமான தேர்தல் முறைசார் சீர்திருத்தங்கள் குறித்து ஒரு பொதுவான நல்லிணக்கம் இல்லாத நிலையில், தற்காலிக அரசியல் இலாபங்களுக்கு உகந்தவகையில் கொண்டுவரப்படும் அரைகுறைச் சீர்திருத்தங்களை ஸ்ரீ.ல.மு.கா ஆதரிக்கமாட்டாது.

### 3. தேர்தல் சீர்திருத்தங்கள்

1978 அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள பாராளுமன்றத் தேர்தல்கள் குறித்த சட்டங்கள் இந்த நாட்டில் முஸ்லிம் சிறுபான்மையினருக்கெனப் பதிவு பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்று இல்லாத நிலையில் வகுத்தமைக்கப்பட்டவையாகும். 1948 மற்றும் 1972 அரசியலமைப்புக்களில் இடம்பெற்றிருந்த தேர்தல் பிரதிநிதித்துவமுறைகளையும் 1978 அரசியலமைப்பு தீவிரமாக மாற்றியமைத்தது. 1948 ஆம் ஆண்டின் டொனமூர் மற்றும் சோல்பரி அரசியலமைப்புகளும், 1972இன் குடியரசு அரசியலமைப்பும் பாராளுமன்றத்துக்குத் தனிப்பட்ட அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் ஏற்பாடுகளைக் கொண்டிருக்கையில், 1978 அரசியலமைப்பு அங்கத்தவர்களின் தனித்துவத்தின் முக்கியத்துவத்தை இல்லாமற் செய்ததோடு, பாராளுமன்றத்துக்குப் பதிவுபெற்ற அரசியற் கட்சிகளையும் சுயேட்சைக் குழுக்களையும் தெரிவுசெய்வதைக் கட்டாயமாக்கியது. வேறு வார்த்தைகளிற் கூறுவதாயின் 1978 அரசியலமைப்பு பாராளுமன்றத்தில் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பொறுப்பைத் தனிநபர்களிடமிருந்து பிரித்து அரசியற் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் வழங்கியது.

ஆரம்பகால 12½% வெட்டுப்புள்ளியோடு சேர்ந்த விகிதாகார பிரதிநிதித்துவ முறைமையும், மாவட்ட போனஸ் ஆசனங்கள் எண்ணக்கருவும், வாக்குகளின் விகிதாகாரத்துக்கு ஏற்ற பிரதிநிதித்துவம் என்னும் எண்ணக்கருவின் உள்ளுணர்வுக்கெதிராகச் சென்றன.

(தேர்தல் மாவட்டத்தின் மொத்த ஜனத்தொகையில்) இலங்கை முஸ்லிம் ஜனசமூகம், அம்பாரை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் வன்னி மாவட்டங்கள் தவிர வேறெங்கும் 12½% க்குக் கூடுதலாக இல்லை என்ற உண்மையைவைத்து நோக்குகையில், 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு ஏனைய 18 மாவட்டங்களில் சிதறுண்டு வாழும் 60% மான முஸ்லிம் சிறுபான்மை ஜனசமூகத்தின் அரசியல் பிரதிநிதித்துவத்துக்குப் பாரிய அடியைக் கொடுத்துள்ளது.

ஸ்ரீ.ல.மு.கா சரியான நேரத்தில் தோற்றம் பெற்றிருக்காவிடில் வட-கிழக்கு மாகாண முஸ்லிம்களும் தனது சுதந்திரமான அரசியல் பிரதிநிதித்துவத்தை இழந்து விட்டிருப்பதோடு, அவர்களின் தலைவிதிகளும் பிரதான, பேரினவாத அரசியற் கட்சிகளின் விருப்புக் கோலங்களுக்கேற்ப அமைந்திருக்கும்.

சிறுபான்மை ஜனசமூகங்களுக்கும் சிறுபான்மையின் அரசியற் கட்சிகளுக்கும் உரியதை வழங்காத விகிதாகாரப் பிரதிநிதித்துவ முறைமை பிரதான அரசியற் கட்சிகளுக்கு நியாயமற்ற அனுகூலத்தை ஏற்படுத்தியது. இக்கட்சிகள் பெற்ற ஆசனங்களின் தொகை தேர்தலில் அவை பெற்ற வாக்குகளுக்கேற்ற விகிதாசாரமற்ற முறையில் அதிகமாகவிருந்தன. பாராளுமன்றத் தேர்தல்களைப் பொறுத்தவரையில் வெட்டுப்புள்ளி 12½%இல் இருந்து 5% ஆகக்குறைக்கப்பட்டமை, மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தில் 12½ வெட்டுப்புள்ளி முற்றாகவே நீக்கப்பட்டமை என்பவை (போன்ற தேர்தல் சீர்திருத்தங்கள்) முழுக்க முழுக்க ஸ்ரீ.ல.மு.கா வின் முயற்சிகளின் பேரில் அறுவடை செய்யப்பட்டவை என்பதைப் பதிவிலிடுதல் பொருந்தும்.

ஐ.தே.க தனது 1994 பாராளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மாவட்ட போனஸ் ஆசனத்தையும், 5% வெட்டுப்புள்ளியையும் ஒழிப்பதற்கு முன் வந்தது குறித்து ஸ்ரீ.ல.மு.கா தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

புதிய தேர்தல் சீர்திருத்தங்களுக்கு முன்னர், வழமையான எல்லை மீள் வரைவு ஆணைக்குழு நியமிக்கப்பட்டுத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்படமாட்டா என்ற உண்மையிலிருந்து எழும் கட்டுப்பாடுகள் குறித்தும் ஸ்ரீ.ல.மு.கா. உணர்ந்தேயுள்ளது. இதற்குக் காரணமாயிருப்பது 1981க்குப் பின்னர் நாடு ஒரு தேசிய குடிசன மதிப்பீட்டை நடத்துவதற்கு இயலாதிருப்பதாகும். சமாதானத்தை ஏற்படுத்தும் உடனடிச் சாத்தியங்கள் இல்லாமையால், சமீப எதிர்காலத்தில் இன்னுமொரு குடிசன மதிப்பீட்டைச் செய்யும் உத்தரவாதம் எதுவுமில்லையென்பதும் நாம் அறிந்ததாகும். 1976 இன் எல்லை மீள்வரைவு ஆணைக்குழு 1971இன் குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் செயலாற்றியது. இதன் பிரகாரம் நாட்டில் 12,701,143 பேரும், 11,605,903 பிரஜைகளும் இருந்தனர்.

இந்த எல்லை மீள்வரைவு ஆணைக்குழு 90,000 பேருக்கு ஒரு தேர்தல் தொகுதியென்ற அடிப்படையில் 143 ஆட்புலத் தேர்தல் தொகுதிகளையும், 1,000 சதுர மைல்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் 25 மேலதிக தேர்தல் தொகுதிகளையும் உருவாக்கியது. இவ்வாறான நடவடிக்கை 168 அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் 160 ஆட்புலத் தேர்தல் தொகுதிகளை உருவாக்கியது.

ஆயினும் 10 இலட்சத்துக்கு மேற்பட்டோர் (1,105,240) பிரஜைகள் அல்லர் என்பதும், அவர்களுக்கு வாக்குரிமை இல்லையென்பதும் அவர்களுக்குப் பாராளுமன்றத்திலுள்ள உரிய பிரதிநிதித்துவம் மறுக்கப்படுகின்றதென்பதைக் காட்டுகின்றது. இந்த ஜனசமூகத்துக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமற் போனது பெரும்பான்மைச் சமூகத்துக்கேற்பட்ட அனுகூலமாயிற்று.

இதனால் 73% சிங்களவர்களுக்குப் பாராளுமன்றத்தில் 83% ஆசனங்களும் 12% இலங்கைத் தமிழர்களுக்கு 11% ஆசனங்களும், 8% முஸ்லிம்களுக்கும் 5% ஆசனங்களும், 6% இந்தியத் தமிழருக்கு 3% பாராளுமன்ற ஆசனங்களும் கிடைத்துள்ளது.

இனம், மதம் மற்றும் வேறெந்த நலன்களாலும் இணைக்கப் பட்டோரும் அப்பிரதேசத்தில் பெரும்பான்மை வாசிகளிலிருந்து இவ்வம்சங்களில் ஏதாவதொன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் வேறுபடுவோருமான மக்கள் குறிப்பிடத்தக்க அளவில் செறிவாக வாழுமிடத்து அவர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்குச் சிறிய தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டுமென்ற கோட்பாட்டுக்கு 1976இன் எல்லை மீள்வரைவு ஆணைக்குழு போதிய கவனஞ்செலுத்தவில்லை.

உதாரணமாக கண்டி, தெல்தெனியா, வியலுவ மற்றும் கொழும்பு மேற்கு போன்ற சிங்களவர் பெரும்பான்மைப் பிரதேசங்களில் சராசரி வாக்காளர் தொகைக்கு அரைவாசிக்கும் குறைவான வாக்காளருள்ள தேர்தல் தொகுதிகளை எல்லை மீள்வரைவு ஆணைக்குழு உருவாக்கிய அதேவேளையில், அம்பாறை மாவட்டத்தில் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தினர் பெருமளவில் செறிந்துவாழும் பெரும்பான்மை முஸ்லிம் கிராமமாகிய அக்கரைப்பற்று எவ்வித நியாய விளக்கமோ, இரக்கமோ இன்றிச் சம்மாந்துறைத் தேர்தல் தொகுதியின்கீழ் ஒருபகுதியும் பொத்துவில் தொகுதியில் மறுபகுதியுமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது அக்கரைப்பற்று வாக்காளர் ஒருவர் சம்மாந்துறைத் தேர்தல் தொகுதியிலோ அல்லது பொத்துவில் தேர்தல் தொகுதியிலோ போட்டியிட்டு வெற்றியீட்டும் நியாயமான வாய்ப்பை நிரந்தரமாகவே இல்லாமற் செய்துள்ளது.

1981ஆம் ஆண்டில் எல்லை மீள்வரைவு, அவ்வருடத்தில் இடம்பெற்ற பொதுக் குடிசன மதிப்பீட்டு விவரங்களைப் பயன்படுத்தாமலேயே மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, 1976 எல்லை மீள்வரைவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 160 ஆட்புலத் தேர்தல் தொகுதிகள் மாற்றப்படாது அப்படியே விடப்பட்டதோடு, மாகாணத்துக்கு 4 ஆசனங்கள் வீதம் 9 மாகாணங்களுக்கும் 36 ஆசனங்கள், ஜனத்தொகைக்கோ நிலப்பரப்புக்கோ எவ்வித

முக்கியத்துவமும் அளிக்கப்படாது, மேலதிகமாக ஏற்படுத்தப்பட்டன. தேசிய விகிதாசார பிரதிநிதித்துவத்துக்கென மேலும் 29 ஆசனங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு, பாராளுமன்றத்தின் மொத்த அங்கத்தினர் தொகை 225 ஆகியது.

ஸ்ரீ.ல.மு.கா இவற்றுக்கு இந்நாட்டில் பல்வேறு அரசியல் அபிப்பிராயப் பிரிவினர் காட்டிய பிரதி விளைவுப் பேறைச் சீர்தூக்கிப் பார்த்துப் பின்வரும் முடிவுகளை எடுத்துள்ளது.

1. எதிர்காலப் பாராளுமன்றங்களின் அங்கத்துவம் தேசிய இனத்துவ விகிதாசார அமைப்பைப் பிரதிபலித்தல் வேண்டும். ஆகவே ஆட்புலத் தேர்தல் தொகுதிகள் இக்குறிக்கோளை ஈட்டும் முறையில் உருவாக்கப்படுதல் வேண்டும்.

2. பாராளுமன்ற அங்கத்தவர்களில் அரைவாசிப்பேர் ஆட்புலத் தேர்தல் தொகுதிகளில் முதலில் கம்பத்தைத் தாண்டுபவர் முறைமையிலும் (எப்.பீ.பீ) எஞ்சிய அரைப்பங்கினர் தேசிய விகிதாகார பிரதிநிதித்துவ முறையில், முறையே கட்சிகள்/குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட வேண்டும்.

   1. ஒவ்வொரு வாக்காளருக்கும் இரு வாக்குகள் இருக்கவேண்டும். முதல் வாக்கு, தனது ஆட்புலத்தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்யும் அபேட்சகரைத் தெரிவுசெய்வதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

| இனத்துவக் குழு | % | ஆசனங்கள்/ எப்.பீ.பீ | ஆசனங்கள்/ பி.ஆர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சிங்களவர்கள் | 74 | 82 | 82 | 164 |
| தமிழர்கள் | 12 | 14 | 14 | 28 |
| முஸ்லிம்கள் | 08 | 08 | 08 | 16 |
| இந்தியத் தமிழர்கள் | 06 | 06 | 06 | 12 |
| மொத்தம் | 100 | 110 | 110 | 220 |

ii. இரண்டாவது வாக்கு தேசிய கொள்கை விடயங்களில் வாக்காளரைப் பிரதிநிதித்துவம் செய்யும் நோக்கத்துடன் ஒரு கட்சியைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

iii. தேசிய மட்டத்தில் இரண்டாவது வாக்கு பிரயோகிக்கப்பட்ட முறையை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் ஆணையாளர் தனிக்கட்சிகளுக்கு/ குழுக்களுக்குப் பாராளுமன்றத்தில் கிடைக்க வேண்டிய மொத்த ஆசனங்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பார். இந்த மொத்தத் தொகையிலிருந்து ஆணையாளர் முதலாவது வாக்கின் அடிப்படையில் தனிப்பட்ட தேர்தல் தொகுதிகளில் கட்சிகளுக்குக் கிடைத்த ஆசனங்களின் மொத்தத் தொகையைக் கழித்துக் கொள்ளுவார்.

iv. சம்மந்தப்பட்ட அரசியற் கட்சிகுழு தேர்தல் ஆணையாளரின் பணிப்புரையின் பேரில் கட்சிக்கு உரியதான எஞ்சியுள்ள ஆசனங்களின் தொகைக்கேற்ப தேசிய விகிதாசார பிரதிநிதித்துவ நிரலிருந்து அபேட்சகர்களின் பெயர்களைத் தாக்கல் செய்யும்.

4. பாராளுமன்றத்தின் அங்கத்தவர் தொனை குறைக்கப்படல் வேண்டுமென்பதை ஸ்ரீ.ல.மு.கா ஆதரிக்கின்றது. ஆயினும் மொத்த ஆசனங்கள் 220 ஆக அமைதல் வேண்டுமென்றும், 110 பேர் எப்.பீ.பீ. முறையில், 90 ஆட்புலத் தேர்தல் தொகுதிகளிலிருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டுமென்றும் எஞ்சிய 110 பேர் தேசிய விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்மென்றும் நாம் ஆலோசனையை முன்வைக்கின்றோம்.

5. ஆட்புலப் பிரதிநிதித்துவம் மற்றும் தேசிய பிரதிநிதித்துவங்களிடையே 50-50 பிரிவுக் கோட்பாடு பேணப்படுமெனில், பாராளுமன்ற அங்கத்தவர் தொகை மேலும் குறைக்கப்படுவதற்கும் ஸ்ரீ.ல.மு.கா ஆதரவு வழங்கத்

தயங்கமாட்டாது. தற்போதுள்ள 160 ஆட்புலத் தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை மாற்றாது அப்படியே வைத்துக்கொண்டு, இயன்றவரையில் அருகமைவான தேர்தல் தொகுதிகளை இணைப்பதன் மூலம் மேற்கூறப்பட்ட 90 ஆட்புலத்தேர்தல் தொகுதிகள் ஈட்டப்படலாம்.

90 ஆட்புலத் தேர்தல் தொகுதிகளிலும் 75 ஓர் அங்கத்தவர் தொகுதிகளும், 10 இரண்டு அங்கத்தவர் தொகுதிகளும், 5 மூன்று அங்கத்தவர் தொகுதிகளும் இருக்கும் பாராளுமன்றத்திலிருக்கும் 220 ஆசனங்களும் மேலே குறிப்பிடப்பட்ட முறையில் ஒதுக்கியளிக்கப்படல் வேண்டும்.

6. உத்தேச தேர்தல் முறை மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் ஒரு புதிய எல்லை மீள்வரை ஆணைக்குழுவின் நியமனம் முதலில் இடம்பெறாத வரையில், ஒரு போதுத் தேர்தல் நடத்துவதை ஸ்ரீ.ல.மு.கா எதிர்க்கும். எல்லை மீள்வரைவு ஆணைக்குழுவுக்கு, பல அங்கத்தவர் தொகுதிகளை உருவாக்கவும். சிறுபான்மையோர் மற்றும் சாதி, மதம் போன்ற பொதுவான நலன்களால் ஐக்கியமுற்றுப் பெருமளவில் செறிந்து வாழுவோரின் சட்டநிலைத் தகவுள்ள பிரதிநிதித்துவ உரிமைப்பங்கை உறுதிசெய்யக்கூடிய வகையில் சிறிய தேர்தல் தொகுதிகளை உருவாக்கவும் அதிகாரம் இருத்தல் வேண்டும்.

7. தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற அங்கத்தவர்களின் சுதந்திரத்தைப் பலப்படுத்தும் எந்தத் தேர்தல் சீர்திருத்தத்தையும் ஸ்ரீ.ல.மு.கா ஆதரிக்கும் இது கட்சியின் பணிப்பாணையை மீறி வாக்களிக்கும் உரிமையை அங்கத்தவர் பிரயோகித்த பின்னர் அவர் பாராளுமன்ற ஆசனத்தைக் கைவிடவேண்டுமென்றும் ஒரு புதிய இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்றும் ஸ்ரீ.ல.மு.கா கோருகின்றது. விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் தெரிவுசெய்யப்படும் அங்கத்தவர்களைப் பொறுத்தவரையில் கட்சியின் அபிப்பிராயம் முக்கியமானதொன்றும், தனிப்பட்ட அங்கத்தவர் சுதந்திரத்தைவிட அது மேலோங்க வேண்டுமென்றும் ஸ்ரீ.ல.மு.கா கருதுகின்றது.

## 4. அடிப்படை உரிமைகள்

சட்டவாக்கத்தை மீள்பார்வைக்கு உட்படுத்தும் நீதித்துறையின் உரிமை உள்ளடங்கலாக, முஸ்லிம் தனிப்பட்டோர் சட்டத்தின் மேலாதிக்கத்தை எவ்வகையிலும் கேள்விக்குட்படுத்தும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின்கீழ் இடம்பெறுவதை ஸ்ரீ.ல.மு.கா தீவிரமாக எதிர்க்கின்றது.

## 5. அதிகாரப் பகிர்வுக்கான அலகு

இனத்துவ மனக்குறைகள் ஒரு சமூகத்தை அல்லது ஒரு மதத்தைச் சாரந்தோருக்கு மாத்திரம் உரியதல்ல. இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் அனைவருக்கும் மனக்குறைகள் உள்ளன. இனத்துவ மனக்குறைகளைத் தீர்ப்பதற்குப் பல்வேறு அரசியல் தீர்வுகள் முன்வைக்கப்பட்டன. இப்பிரேரணைகள் அனைத்திலுமுள்ள பொதுவான அம்சம் அதிகாரப் பகிர்வுக்கான அமைப்பாகும்.

பெரிதும் மத்தியப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சிக்கும், தனிநாட்டுக்கும் இடையில் ஒரு விட்டுக்கொடுக்கும் ஏற்பாடாக, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய சகல இனத்துவக் குழுக்களாலும் ஆட்சி அதிகாரம் நியாயமாகப் பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒட்டுப்போடுவதும், அறைகுறையான நடவடிக்கைகளும் தீர்வை மேலும் சிக்கலாக்கவே உதவும். பகிர்வு செய்யப்பட்ட அதிகாரங்கள் இனத்துவக்குழுக்கள் தான் பெரும்பான்மையாகவுள்ள பிரதேசங்களின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு தீர்மானம் எடுக்கும் செயல்முறைகளில் பூரணமாக பங்கேற்பதற்கு உதவுவதாக இருத்தல் வேண்டும்.

தற்போதுள்ள மாகாணசபைகள் சட்டத்தின்படி முஸ்லிம்களும் தமிழர் சிங்களவர் போன்று அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பில்லை. இப்போது சிங்களவர்கள் ஏழு மாகாணங்களில் பெரும்பான்மையாக உள்ளதால் அவர்கள் ஏழு சபைகளில் அதிகாரமுள்ளவர்களாய் இருக்கின்றனர். தமிழர்கள் 2 மாகாணங்களில் பெரும்பான்மையாக உள்ளதால் அவர்கள் 2 சபைகளில் அதிகாரமுள்ளவர்களாய் இருக்கின்றனர். தற்போதுள்ள எந்த மாகாணத்திலும் முஸ்லிம்கள் பெரும்பான்மை இனமாக இல்லாதிருப்பதால் அவர்கள் சிங்களவர்களைப் போன்று அல்லது தமிழர்களைப் போன்று அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள முடியாது.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இப்போதுதான் முதல் தடவையாகச் சிறுபான்மை இனங்களோடு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆகவே இந்த முக்கியமான காலகட்டத்தில் முஸ்லிம்களாகிய நாம் அலட்சியம் செய்யப்படுவதையும், எமது சட்ட நிலைத் தகவுள்ள உரிமைகள் மறுக்கப்படுதலையும் விரும்பவில்லை. நியாயமானதும், நேர்மையானதுமான ஒரு தீர்வு 77% சிங்களவருக்கு 7 சபைகளையும், 18% தமிழர்களுக்கு 2 சபைகளையும், 8% முஸ்லிம்களுக்கு 1 சபையையும் உருவாக்குவதாகும்.

முஸ்லிம்களாகிய நாம் இலங்கைப் பிரஜைகள் என்றவகையில் சட்ட நிலைத் தகவின்படி கிடைக்க வேண்டிய உரிமைகளுக்கு அதிகமாக எப்பொழுதும் கேட்டதில்லை. நாம் பிரிவினையைக் கோரவுமில்லை. அதற்காக எமது உரிமைகளை மறுப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

வட-கிழக்கு மாகாணங்கள் பருத்தித்துறையிலிருந்து குமன வரையில் பரந்து கிடக்கின்றன. 7,268 சதுர மைல்கள் நிலப்பரப்புக் கொண்ட அசை அண்ணளவாக முழுத்தேசத்தினதும் மூன்றிலொருபங்கு நிலப்பரப்பையும் மூன்றிலிரண்டு பங்கு கரையோரப் பிரதேசத்தையும் உள்ளடக்கியுள்ளன.

வடமாகாணம் 3,429 சதுர மைல்கள் கொண்டது. 1981 குடிசன மதிப்பு விபரப்படி ஜனத்தொகை அங்கு 1,111,468 ஆகும். தமிழர் 92%, முஸ்லிம்கள் 5%, சிங்களவர் 3%. யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலப்பரப்பு 12.8% - 440 சதுர மைல்கள். ஜனத்தொகை 738,788 - இது வடமாகாண மொத்த ஜனத்தொகையில் 67%. தமிழர் 98% முஸ்லிம்களும், ஏனையோரும் 2% மாத்திரம். வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களான மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி என்பவற்றின் மொத்த நிலப்பரப்பு 82% - 2,989 சதுர மைல்கள், ஜனத்தொகை 370,616 - 33%.

கிழக்கு மாகாணம் 3,839 சதுர மைல்கள் நிலப்பரப்பை கொண்டுள்ளது. 1981ம் ஆண்டின் குடிசன மதிப்பு விபரங்களின் படி சனத்தெகை 993,435. தமிழர்கள் 42% ஆகவும், முஸ்லிம்கள் 33% மாகவும், சிங்களவர் 24 ஆகவும் இருந்தனர். 1016 சதுர மைல்கள் நிலப்பரப்பைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்திலேயே தமிழர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். இங்கு தமிழர் 73%, முஸ்லிம்கள் 24%, சிங்களவர் 3%. கிழக்கு மாகாணத்தின் எஞ்சிய பகுதிகளில் 72% நிலப்பரப்பைக் கொண்ட, அதாவது 2,823 சதுர மைல்களைக் கொண்ட திருகோணமலை, அம்பாரை மாவட்டங்களில் தமிழர் சிறுபான்மையினராகவே உள்ளனர். தமிழர்கள் 26%, முஸ்லிம்கள் 37% மற்றும் சிங்களவர் 37%. கிழக்கு மாகாணத்தின் தமிழ் கிராமங்கள் முஸ்லிம் கிராமங்களைப் போன்றே புவியில் ரீதியில் நிலத்தொடர்பற்றவையாகும்.

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழர்களும், முஸ்லிம்களும் பாராளுமன்றத்திற்கும், கலைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாண சபைக்கும் சமமான பிரதிநிதிகளை தெரிவு செய்துள்ளனர். இது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக தமிழர்களோடு சமபலம் பெற்றவர்கள் என்பதை நிருபித்துள்ளது. கிழக்கு மாகாணம் வடமாகணத்தோடு இணைக்கப்பட்டால் முஸ்லிம்களின் இனத்துவ விகிதாசாரம் நிச்சயமற்ற வெறும் 18% ஆவதோடு, அவர்களின் அரசியல் பலமும் பெரிதும் வீழ்ச்சியுறும்.

முஸ்லிம் குடிமக்களுக்கெதிரான தமிழ் போராளிகளின் தொடர்ச்சியான ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் காரணமாக ஆயிரக்கணக்கானோர் தாம் பாரம்பரியமாக வாழ்ந்த நிலப்பிரதேசங்களை விட்டு வெளியேறியுள்ளனர். இத்தகைய பயம், மற்றும் பீதியுணர்வு காரணமாக முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் - எம்.யு.எல்.எப் - தூதுக்குழு ஒன்று 1987 செப்டெம்பரிலும், 1988 ஏப்ரலிலும் சென்னைக்கு இருதடவைகள் விஜயம் செய்து இனவாதத் தமிழ் தலைவர்களுடனும், போராளிகளுடனும் பரந்த அடிப்படையிலான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டது.

கடந்த காலங்களைப் போலவே வடக்கு-கிழக்கு பிராந்தியங்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் அன்னி யொன்னியமாக வாழ வேண்டுமென்ற எமது விருப்பத்தின் பேரிலேயே நாம் எமது பரஸ்பர பிரச்சினைகளை கலந்துரையாடும் நோக்கத்தில் இத்தூதுக்குழுவாகச் சென்றிருந்தோம். உண்மையில் முன்னைநாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவும் நாம் தமிழ் தலைவர்களோடு கலந்துரையாடி அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டுமென்று கூறியிருந்தார். இதை நாம் செய்துள்ளோம்.

1987 ஜுலையில் இடம்பெற்ற இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருபடி மேலும் முன்சென்று, கிழக்கு மாகாணத் தேர்தலில் போட்டியிட்டுத் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாணத்தில் மாகாண சபையை அமைக்க உதவியது.

ஆயினும், இந்திய - இலங்கை ஒப்பந்தமும் அரசியலமைப்புக்கான 13வது திருத்தமும், மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளும் முஸ்லிம்களின் நியாயமான சட்டநிலைத்தகவுள்ள கோரிக்கைகளை வழங்கத் தவறிவிட்டன. அவை எமது உயிர்களையும் சொத்துக்களையும் பாதுகாக்கத் தவறிவிட்டன. எமது மக்களின் சமூக பொருளாதார நலன்களை

முன்னேற்றத் தவறிவிட்டன. முஸ்லிம்களின் வித்தியாசமான இனத்துவ மற்றும் அரசியல் அபிலாஷைகளை அங்கீகரிக்கத் தவறிவிட்டன. முஸ்லிம் உணர்வுகளுக்கும் அபிலாஷைகளுக்கும் காட்டப்பட்ட இத்தகைய பூரண ஊதாசீனம் ஒரு முக்கியமான அரசியல் உண்மையை வெளிப்படுத்துகின்றன. கடந்த கால ஐ.தே.கட்சி அரசாங்கம் வடகிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்குறித்து கிஞ்சித்தும் கவலைப்படவில்லை என்பதே இந்த உண்மையாகும்.

முன்னாள் ஜனாதிபதி ஜயவர்தன தனது சொந்த அரசாங்கத்தினால் மாகாண சபைச் சட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட ஏற்பாடுகளைத் தந்திரமாக ஏமாற்றும் வகையில் அவசரகாலநிலைப் பிரமாணங்களை உபயோகித்துத் தற்காலிக மாகாண இணைப்பொன்றை ஏற்படுத்திக் கிழக்கு மாகாண முஸ்லிம்களைத் தமிழரின்கீழ் வாழும் அரசியல் மற்றும் சமூக அடிமைகள் சமுதாயமாக மாற்றினார். அரசியல் மற்றும் நிர்வாக நோக்கங்களுக்காக வட-கிழக்கு மாகாணங்களைத் தற்காலிகமாக ஒரு நிர்வாக அலகாக இணைத்தது தமிழர்கள் ஒருதலைப்பட்சமாக தமிழ் ஈழம் என்னும் தனிநாட்டைப் பிரகடனம் செய்வதற்கு இட்டுச் சென்றதோடு, அதிகாரப் பகிர்வு என்னும் எண்ணக்கருவையே கேலி செய்வதாகவும் அமைந்தது.

தற்காலிகமாக இணைக்கப்பட்ட வட-கிழக்கில் மாகாணசபை நிறுவப்பட்ட பின்னர் ஆயிரக்கணக்கான முஸ்லிம் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் தமிழர்களால் கொல்லப்பட்டுள்ளனர். 1989 நவம்பர் 17ஆந் திகதி தமிழ்த்தேசிய இராணுவம் ரீ.என்.ஏ அம்பாரை மாவட்டத்தில் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களை ஏக காலத்தில் தாக்கியது - 100 மேற்பட்டவர்களை கொலை செய்தனர் 200 பேருக்கும் மேல் காயமுற்றனர்.

கனரக மோட்டார் மற்றும் வட-கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரால் வழங்கப்பட்ட யுத்த உபகரணங்களோடு காரைதீவு பொலிஸ் காவலரணைச் சூழ்ந்துகொண்ட ரீ.என்.ஏ. இராணுவத்தினர் முதலில் தமிழர்களை போய்விடுமாறு உத்தரவிட்டுவிட்டு 45 முஸ்லிம் பொலிஸ் ரிஸேவ் படையினரை தனியாகப் பிரித்து இரக்கமின்றி கொலை செய்தனர். இது தமிழர்களால் முஸ்லிம்களுக்கு எதிராக நன்கு திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்பது தெளிவாக நிருபனமாகியது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் எல்.ரீ.ரீ.ஈ - இரண்டு மணித்தியால முன்னறிவித்தலோடு முஸ்லிம்களாகிய எம்மை எமது வீடுகளிலிருந்து விரட்டினர். அவர்கள் எமது மக்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்த வேளையில் அவர்களின் முதுகில் துப்பாக்கியால் சுட்டனர். மக்காவிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த முஸ்லிம் யாத்திரிகர்களை கொன்றனர். எமது பள்ளிவாசல், பாடசாலை, நெல் வயல்கள் மற்றும் அரிசி ஆலைகளுக்குத் தீ வைத்துக் கொளுத்தியதோடு எமது கால் நடைகளையும், மீன் பிடிப்படகுகளையும் அபகரித்தனர்.

தமிழ் ஈழ யுத்தத்தின் காரணமாக வட-கிழக்குத் தமிழர் சுயமாகவே தமது வீடுகளை விட்டு வெளியேறி இந்தியாவுக்கும் வேறு மேற்கு நாடுகளுக்கும் அகதிகளாகச் சென்றனர். ஆயினும், முஸ்லிம்களாகிய நாம் தமிழர்களால் எமது வீடுகளிலிருந்து விரட்டப்பட்டும்கூட எந்த முஸ்லிமும் வேறு எந்த அரபு அல்லது முஸ்லிம் நாடுகளுக்கு அகதிகளாகச் செல்லவில்லை. தமிழர்களுக்கெதிராக போரிடும் நோக்கில் எந்தவொரு முஸ்லிம் நாட்டுக்கும் இராணுவப் பயிற்சி பெறவும் செல்லவில்லை. அவர்கள் புத்தளம், குருநாகல், அநுராதபுரம் மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள அகதி முகாம்களில் பெரும் இன்னல்களை அனுபவித்தவர்களாக வாழுகின்றனர். அகதி முகாம்களிலிருந்து 25-30 மைல்கள் தொலைவிலுள்ள தங்கள் வீடுகளுக்கு முஸ்லிம்

அகதிகள் திரும்புவதை தமிழர்கள் தடுக்கின்றனர். அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகள் இந்தியாவிலிருந்தும் வேறு நாடுகளிலிருந்தும் சுதந்திரமாகத் திரும்பி வந்து தமிழர்களால் விரட்டப்பட்ட முஸ்லிம்களின் வீடுகள், கடைகள், பள்ளி வாசல்கள் மற்றும் நெற் காணிகளை தமக்குச் சொந்தமாக அபகரித்துள்ளனர்.

எமது சமீபகால அனுபவங்களிலிருந்து, தமிழர்கள் வட-கிழக்கு மாகாணங்களிலிருந்து முஸ்லிம்களை துரத்திவிட்டு, அதை ஒரு தனிஇனத்துவ தமிழ் பிராந்தியமாக்கி எதிர்காலத்தில் ஒருநாள் தமிழ் ஈழத்தை தாபிக்கும் நன்கு திட்டமிட்ட சதியொன்றில் ஈடுபட்டுள்ளனர் என்பதை முஸ்லிம்கள் இன்று எதுவித சந்தேகமுமின்றி நன்கு அறிந்துள்ளனர்.

தமிழ் பேசும் பிரதேசங்களில் அமையவிருக்கும் அதிகாரப்பகிர்வு அலகு சூழ்நிலைக்கு பொருத்தமானதாகவும், தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் தனியான இனத்துவ உரிமைகளையும் வரலாற்று ரீதியான வாளிடங்களையும் பாதுகாக்கக் கூடியதாகவும் அமைய வேண்டியது அவசியமாகும்.

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைத் தளமாகவும், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் புவியியல் ரீதியாக நிலதொடர்பற்ற தமிழ் பிரதேசங்களாக இனங்காணப்படும் பிரதேசங்களை உள்ளடக்கியதாகவும் ஒரு பெரும்பான்மைத் தமிழ் பிராந்தியம் அமைக்கப்படுதல் வேண்டும்.

அம்பாரை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளைத் தளமாகவும் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களின் புவியில் ரீதியாக நிலத்தொடர்பற்ற முஸ்லிம் பிரதேசங்களாக இனங்காணப்படுபவற்றை உள்ளடக்கி ஒரு முஸ்லிம் பெரும்பான்மை அதிகாரப் பகிர்வுப் பிராந்தியம் ஏற்படுத்தல் வேண்டும்.

முஸ்லிம் பெரும்பான்மை அதிகாரப் பகிர்வு அலகின் விபரங்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

அரசாங்கம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் அதே நேரத்தில் வட-கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்களை அரசியல் மற்றும் சமூக அடிமைகளாக மாற்றிவிடக் கூடாது. எமது வரலாற்றின் மிகவும் இக்கட்டான ஒரு கால கட்டத்தில் பொ.ஜன.ஐ.மு அரசாங்கமும் முஸ்லிம்களுக்கு துரோகமிழைக்காதென நாம் நம்புகிறோம்.

### 6 - முஸ்லிம் அகதிகள்

வட மாகாணத்தில் நடைபெற்ற இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையின் போது எல்.ரீ.ரீ.ஈ. முஸ்லிம்கள் வெளியேறுவதற்கு யாழ்ப்பாணத்தில் இரண்டு மணித்தியாலம், எஞ்சிய மற்றப்பகுதிகளில் இரண்டு நாட்கள் அவகாசம் மட்டுமே கொடுத்தனர்.

வடக்கிலிருந்து வெளியேறிய முஸ்லிம் அகதிகள் புத்தளம், அனுராதபுரம், குருநாகல் கண்டி ஆகிய மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட 123 அகதி முகாம்களில் ஏறக்குறைய 60,000 முஸ்லிம்கள் தற்காலிகமாகத் தங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். இந்தத் தற்காலிக முகாம்கள் மிக மிக நெருக்கமாகவும், சுகாதார வசதிகள் குறைந்ததாகவும் காணப்படுகின்றன.

வடமாகாணத்தில் தமிழ் பயங்கரவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட இனச்சுத்திகரிப்பு இன்று முஸ்லிம்களிடையே பெரும், சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. உடனடி அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம் வடமாகாண முஸ்லிம் அகதிகளைத் தங்கள் சொந்த வதிவிடங்களில் மீழக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

## பின்னிணைப்பு

### *முஸ்லிம் பெரும்பான்மை அதிகாரப் பகிர்வுக்கான அலகு*

1. பானமைப்பற்று, அக்கரைப்பற்று, சம்மாந்துறைபற்று, கரைவாகு-நிந்தவூர்பற்று ஆகிய முன்னாள் நான்கு டீ.ஆர்.ஓ பிரிவுகளும், மற்றும் வெவகம்பற்று தெற்கு உ.அ.அ. பிரிவு (கல்ஓயா ஆற்றுக்குத் தெற்குப்புறமாக) 920 சதுர மைல் பரப்பு அனைத்தும் உள்ளடங்கலாகத் தற்போதைய அம்பாரை மாவட்டத்தில் ஒரு தனியான, முஸ்லிம் பெரும்பான்மை நிர்வாக மாவட்டம் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

2. மேலே 1ல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய நிர்வாக மாவட்டத்தில் ஒவ்வொரு ஜனசமூகத்தினதும் ஜனத்தொகை விகிதாசாரத்துக்கேற்ப விவசாயக் காணிகள் மற்றும் இயற்கை மூலவளங்களை உள்ளடக்கி இனத்துவ அடிப்படையிலான பிரதேச சபைகள் - உ.அ.அ. பிரிவுள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

3. காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை என்பவற்றில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 24% மாகிய முஸ்லிம் ஜனத்தொகை விகிதாசாரத்துக்கு ஏற்ப விவசாய நிலங்கள் மற்றும் இயற்கை மூலவளங்களை உள்ளடக்கி முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச சபைகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். பரப்பு 346 சதுர மைல்கள்.

4. திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூர், கிண்ணியா, தம்பலகாமம், தோப்பூர் மற்றும் குச்சவெளியில், 29% ஆகிய முஸ்லிம் ஜனத் தொகையின் விகிதாசாரத்துக்கு ஏற்ப விவசாய நிலங்கள் மற்றும் இயற்கை மூலவளங்களை உள்ளடக்கி முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச சபைகள் - உ.அ.அ. பிரிவுகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். பரப்பு 414 சதுர மைல்கள்.

5. மன்னார் மாவட்டத்தில் முசலி மற்றும் எருக்கலம்பிட்டியில், 27% ஆகிய முஸ்லிம் ஜனத்தொகையின் விகிதாசாரத்துக்கேற்ப விவசாய நிலங்கள் மற்றும் இயற்கை மூலவளங்களை உள்ளடக்கி முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசசபைகள் - உ.அ.அ. பிரிவுகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். பரப்பு 278 சதுர மைல்கள்.

6. கல்முனை, சம்மாந்துறை, காத்தான்குடி மற்றும் கிண்ணியாவில் பிரதேசசபை உ.அ.அ. பிரிவுகள் தவிர்ந்த பகுதிகளில், முஸ்லிம் பெரும்பான்மையைக் குறைக்காத விதத்தில் நகரசபைகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

7. மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களில் முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகள் - உ.அ.அ. பிரிவுகளை இணைக்கும் விதத்தில், தனியான முஸ்லிம் பெரும்பான்மை நிர்வாக மாவட்டங்கள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

8. வட-கிழக்குப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்படும் சகல முஸ்லிம் பெரும்பான்மை நிர்வாக மாவட்டங்களும் தனியான தேர்தல் மாவட்டங்களாகக் கணிக்கப்படுதல் வேண்டும்.

9. 1,958 சதுர மைல்கள் அல்லது 5,071 சதுர கிலோ மீற்றர்கள் நிலப்பரப்பும் 480,000 ஜனத்தொகையுமுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள சகல முஸ்லிம் பெரும்பான்மை நிர்வாக-தேர்தல் மாவட்டங்களுக்கும் வட-கிழக்குப் பிராந்தியத்தில் முஸ்லிம் பெரும்பான்மை அதிகாரப் பகிர்வு அலகாக அமைதல் வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு 1995 மே மாதம் 26ஆம் திகதி முன்வைத்த பிரேரணையில் கோரப்பட்டவாறான முஸ்லிம்கள் அதிகப்படியான பிராந்தியசபை பற்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் சமர்ப்பித்த திருத்தப் பிரேரணையில் எதுவும் கூறப்படாதது அவ்வாறான கோரிக்கையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முற்றாகக் கைகழுவிவிட்டது என்னும் தப்பபிப்பிராயத்தை முஸ்லிம்களிடையே, குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

எம்.ஐ.எம்.முஹியத்தீன்